மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பனைவெல்ல உற்பத்தி சம்பந்தமான பிரச்சினையை தனி இலாகா கவனிக்கிறது. தனிக்கேள்வி போட்டால் அதுபற்றிய விவரங்களைத் தரலாம்.

New strain of wheat.

* 229 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether the Government of India have requested this Government to conduct research to develop a suitable strain of wheat to be grown in this State ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இல்லை.

திரு. என். கே. பழனிசாமி : இந்த மாநிலத்தில் கோதுமைப் பற்றுக்குறை கடுமையாக இருப்பதோடு கூட இப்போது கோதுமை உணவு மக்களுக்கு அதிகமாகத் தேவைப் படுகிறது. இந்த மாநிலத்திலும் ஜூன் அல்லது அக்டோபரில் கோதுமையில் நல்ல விளைச்சல் கிடைக்கும் என்பதாலும் சர்க்கார் இதற்கு ஒரு புதிய திட்டத்தை ஏற்பாடு செய்து கோதுமையை அதிகப்படியாக உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நீலகிரி மாவட்டத்தில் ஏறத்தாழ 1,100 ஏக்கரில் கோதுமை விளைகிறது.

கால்நடைப் பராமரிப்புத் துறை குற்றேவலர்கள்.

*230 வினா—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

கால்நடைப் பராமரிப்புத் துறையில் தற்காலிக குற்றேவலர்களாக இருந்தவர்களை நிலையான பணியாளர்களாக ஆக்கிட வேண்டி பிறப்பிக்கப் பட்ட ஆணைகளின்படி இதுவரை எத்தனை பேர்கள் பயனடைந்துள்ளார்கள்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : 1590.

Animal Husbandry Sub-centres in Kanyakumari district

* 231 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the total number of Animal Husbandry Sub-Centres functioning in Kanyakumari district; and

(*b*) whether there is any proposal to increase their **number** in Killiyoor Panchayat Union area?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) 18.

(இ) இல்லை.